விவேகபாநு.

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு—திருக்குறள்.

வால்யூம் I] பிப்ரவரிமீ 1-உ [புத்தகம் 6

நான் யார்.

சாதாரணமாய்த் தூரத்திலிருக்கும் பொருள்களையே அநுபவிப்பதிலும் அறிவதிலும் மாந்தர் சந்தோஷமடைகின்றனர். திருஷ்டாந்தமாக இவ்விந்தியாவின் கண் அதிகச்சிறப்புடையதும் அழகுவாய்ந்ததுமான கல்கத்தா அல்லது பம்பாய் நகரத்தில் வாழும் ஓர் மனிதனை எடுத்துக்கொள்வோம். அவன் மதராஸ் பட்டணம் தான் வசிக்கும் நகரத்தைக்காட்டிலும் எவ்வளவோ சிறியதும், அழகிலும் மற்றச்சிறப்புகளிலும் குறைந்ததுமானதென்று கேட்டறிந்திருப்பானாயினும் அதைப்பார்க்கவேணுமென்ற எண்ணம் அவனுக்கு உண்டாகாமலிருக்கிறதில்லை. அதுபோல பக்தன் ஒருவனும் தான் வசிக்குமிடம் மகாஸ்தலமாயிருப்பினும் தூரத்திலுள்ள அப்பிரதானமான ஸ்தலங்களைத் தரிசிக்க இச்சிக்கிறான். இவ்விதமாய் மனிதர்களுக்குண்டாகிற இச்சையின் தன்மையைக் கவனித்துப்பார்ப்போமாயின் அதன் நாட்டம் எப்பொழுதும் தூரத்திலுள்ளவைகளிலேயே இருக்கிறதென்பது வெளியாகும். இத்தன்மை பாலரிடத்தும் காணப்படுகிறதே. அவர் அண்டைவீட்டுச் சாமான்களிலும் ஆகாரப்பதார்த்தங்களிலும் அதிகப்பிரியமுடையவராயிருத்தல்பெற்றோர் யாவர்க்கும் நாள்தோறும் பிரத்தியக்ஷமாயிருந்திருக்கலாம். இதுபோலவே அறியுந்தன்மையும் கவனிக்கத்தக்கது. அதாவது மனிதர்கள் அறியவேண்டிய விஷயங்கள் பலவுளவேனும் அவற்றுள் சமீபத்திலிருப்பவைகளைப் பார்க்கிலும் தூரத்திலிருப்பவைகளே முதலில் அவருடைய கவனத்தை இழுக்கின்றன. மனிதர்களுக்குப் பொதுவாயுண்டாயிருக்கும் ஞானத்தைச் சற்றுப் பரிசோதித்துப்பார்ப்போமானால் சமீபத்திலுள்ள விஷயங்களைப்பற்றி அவர்க்குண்டாயிருக்கும் ஞானம் தூரத்திலுள்ளவைகளைப்பற்றி அவர்களுக்குண்டாயிருக்கும் ஞானத்தைப் பார்க்கிலும் குறைந்தேயிருக்குமென்பது திண்ணம். சமீபத்திலுள்ள விஷயங்களைப்பற்றித்தான்

ஒருவனுக்கு அதிக ஞானமுண்டாகிறது என்று சொல்லும் பக்ஷத்தில் அது பொருந்தாது. ஏனெனில் மனிதனுக்குச்சமீபமாயிருக்கும் பொருள்களுக்கெல்லாம் அதிகச்சமீபமாயிருப்பது 'நான்' என்னும் சொல்லின் பொருளே. 'நான்' 'நான்' என்று வியவகரியாத ஜனங்கள் யாருமிலர். அங்ஙனமிருந்தும் 'நான் யார்?' என்னும் வினா மனதில் தோன்றும் பாக்கியத்தைப் பெற்றபுருஷர் எத்தனைபேரிருப்பார்கள்? அவர்கள் தொகையை விரலினால் எண்ணிவிடலாமென்பது நிச்சயம். இத்தனை சமீபமாயிருக்கும் தன்னைப்பற்றி ஒருவருக்கும் நினைவுண்டாகாததற்குக்காரணம் என்னென்றுரைப்பாம்!

தூரத்திலுள்ள உலகவிஷயங்களை அறிவதில் ஒருவனுக்கு மனம் சென்று அவன் எவ்வளவு திட்பமாய் அவைகளின்விசித்திரங்களைக் கண்டு பிடிப்பானாயினும் அவனுக்குயாதுபயனைக்கொடுக்கும்? அவைகளால் உலகசௌரியத்தில் ஏதேனும் உதவியிருப்பதுபோல் தோன்றினும் எதைப் பெற்றால் அவனுடைய மனம் நித்தியதிருப்தியை யடையுமோ அதை அவைகள் கொடுக்கின்றனவா? கொடுக்குமா? ஒருவனுடைய மனம் நித்திய சுகத்தினால் நித்தியதிருப்தி யடையுமேயன்றி மற்றெதினாலும் அடைவதில்லை. ஒவ்வொருவரும் நன்றாய் ஆலோசித்துப்பார்க்கின் இவ்வுண்மை புலப்படும். நித்திய சுகம் எனினும் மோக்ஷம் எனினும் ஒக்குமாதலின் நித்திய திருப்தியெய்தும் பொருட்டு யாவரும் மோக்ஷமடைய முயற்சிக்க வேண்டுவதவசிய மென்பது பெறப்பட்டது. அம்மோக்ஷத்தையடைதற்குச் சாதனமோ ஞானமாயிருக்கிறது. ஞானத்திற்கு வித்தோ விசாரணையாயிருக்கிறது. விசாரணையோ 'நான் யார்?' என்னும் வினாவை முதலாககொண்டு எழுகின்றது.

" அனாதியாஞ் சரீரத்தி
லிந்தநானெனவன் சித்தெது சடமெது விரண்டு மொன்றாக்கூடும்
பந்தமேது வீடேதென் றுசாவுதல் பகர் விசாரமதாமே."

(இதன்பொருள்:—மனமாதியாக நின்றுள்ள சூக்ஷம ஸ்தூலதேகங்களிலிருக்கின்ற இந்த நானென்பவன் யார்? சித்தெனவும் ஜடமெனவும் யாவை? இவ்விரண்டு மொன்றாகச் சம்பந்தித்த சம்பந்தம்யாது? இச்சம்பந்தம் நீங்கி நிற்கும் நிலை யாது? என்று இடைவிடாது விசாரிப்பதே விசாரணை யென்பதாம்.) என்று கைவல்லிய நவநீதத்தில் கூறியிருப்பது காண்க. இங்ஙனம் மனிதர் முக்கியமாயறியவேண்டிய பொருளாயிருக்கும் தன்னைப் பற்றி ஒருதடவையாவது 'நான் யார்?' என்று வினவச் சாவகாசமுடையவரிலர். என்ன ஆச்சரியம்! மாயாவல்லமைகளுள் மிகவும் வியக்கத்தக்க திஃதொன்றேயா யிருக்கின்றது. மாயையின் இவ்வொரு சக்திக்கு யாரேனும் கீழ்ப்படியின் அதனுடைய மற்றச்சக்திகள் யாவும் எளிதில் வந்தடைகின்றன. ஆகவே யதார்த்த ஞானம் மறைபட்டு விபரீத ஞானமுண்டாகின்றது.

உலகத்தில் பலர் இவ்விசாரணையில் புகாதவரென முன்னர்க்கூறியிருத்தலாலும் அத்தகையோர்க்கு மாயாசக்திகளின் பிரேரகத்தால் விபரீத ஞானமுண்டாகின்றதென வற்புறுத்தியிருத்தலாலும் அவரிடத்தில் விபரீதஞானம் காணப்படவேண்டியதவசியமன்றோ? அவ்விபரீதஞானம் யாது? எனின் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்று சொல்லப்படும் பஞ்சபூதங்களின் சேர்க்கையாயுள்ள ஸ்தூல சரீரத்தையன்றோ அவர் தான் எனக்கொண்டிருக்கின்றனர்? இது தொர்த்தஞானமாகுமோ? ஒருதரத்தில் ஜனனமாதல், பிறந்து உளவாதல், வேறுபாகவிருத்தியாதல், பரிணாமமாதல், இளைத்தல், நசித்தல் என்னும் அறுவகை விகாரங்களையுடையதான சரீரத்தையே தான் என்றிருப்பதினால், அஃதடையும் விகாரங்கள் யாவற்றையும் தாம் அடைவதாகக் கருதி ஜனங்கள் துன்புறுவதில் ஆச்சரியம் என்னை? மனிதர்களுக்கு மோகத்தையுண்டுபண்ணும் உலகப்பொருள்கள் யாவும் மேற்கூறிய அநித்திய சுபாவத்தனவன்றோ? அவ்வுண்மையையுணராது மாந்தர்கள் அவையாவும் சாசுவதமாயுள்ளனவென்றெண்ணித் துக்கத்துக்காளாகின்றனர்.

"பொத்தவுடலை நானெனவெம் மட்டுக்காணு மிப்பொருளில்
வத்துவெனும் பாவனையெம்மட் டம்மட்டுளமா திரின்மயக்கம்."

(இதன்பொருள்:—நவத்துவாரமுள்ள சரீரத்தை நானென்பதும் தோற்றுகின்ற உலகப்பொருள்களில் மெய்ப்பொருளின் பாவனையும் எதுவரையிருக்கின்றனவோ அதுவரையும் சித்தமுதலானவைகளின் மயக்கம் உள்ளதாம்.) என்று வாசிஷ்டத்தில் கூறியிருத்தலின் விபரீதஞானமுள்ளளவும் மயக்கம் நீங்குதலின்று. மயக்கம் நீங்கினன்றி மெய்ச்சுகம் லபித்தலின்று. ஆயின் மயக்கம் எதினால் நீக்கப்படும்? எனின், அஃது மெய்ஞ்ஞானத்தினாலேயே நீக்கப்படும். என்னை? அறியாமை அதாவது அஞ்ஞானமே மயக்கத்திற் கேதுவாகலின். மெய்ஞ்ஞானமோ 'நான்யார்?' என்று உற்றுநோக்குதலை முதலாகக்கொண்டெழுகின்றதென முன்னரே கூறியிருக்கின்றோம். ஆகையால் சகலமாந்தர்களும் அவரவருடைய காரியசித்தியாகிய சுகப்பிராப்தியின்பொருட்டே தன்னை விசாரிக்கத் தலைப்படுவாராக.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

வள்ளிநாயகம்.

கடவுள் ஒருவரோ.

கடவுள் சர்வஞ்ஞரென்றும், சர்வவியாபகரென்றும், விகாரமற்றவரென்றும், நித்தியரென்றும், ஏகரென்றும் சர்வமதநூல்களும் ஒரேதன்மையாகச்சொல்லுகின்றன. ஒரு கிறிஸ்தவனை அல்லது ஒருமகமதியனை,

ஒரு பார்வையினை அல்லது ஒரு புஸ்தகத்தை அல்லது வேறோர் மதத்தை மனமார அனுசரிக்குமொருவனைப்பார்த்து அவனுடைய கடவுள் எத்தன்மையெனக் கேட்போமாயின் ஒவ்வொருவனும் மேற்சொல்லிய குணங்களையுடையவரென்கிற தன்தன் மதநூல்களின் வாக்கியங்களை எடுத்துக் காட்டுவன். ஏசுவினுடைய விக்கிரகத்தின்முன் தூபதீபங்களையேற்றி அவரை வணங்கும் கத்தோலிக் சுவாமியாரும் கடவுள் இத்தன்மைகளையுடையவரென்றே சொல்லுவர். விக்கிரகத்திற் கடவுளில்லையெனச் சொல்லும் பிராட்டஸ்டண்டு பாதிரியாரும் கடவுள் இக்குணங்களையுடையவரென்றே சொல்லுவர். இவ்வாறு சகல மதஸ்தரின் கடவுளும் ஒரேதன்மைகளையுடையவராய் ஒருவராகவே இருக்க, அவரெல்லோரும் அறியாமையினாலும், மூட பக்தியினாலும், பிடிவாதத்தினாலும், மதோன்மத்தத்தினாலும் தமது கண்கள் மறைக்கப்பட்டிருத்தலின், ஒருவருக்கொருவர் 'எமது கடவுள்' 'நமது கடவுள்' எனச்சண்டையிட்டலறுகின்றனர். ஒவ்வொரு மதஸ்தரும் ஓரே கடவுளைத்தான் வணங்குகிறோமென அவர் அறிகின்றிலர். தமது மதத்திற்குரிய கடவுளே உண்மையானவரென்றும், பிறமதஸ்தருடைய கடவுள் உண்மையல்லாதவரென்றும் அவர் நினைக்கின்றனர். அவ்வெண்ணந்தான் இவ்வளவு விபரீதங்களையும் விளைவிக்கின்றது. கொஞ்சகாலத்திற்குமுன் கடவுளைப்பற்றிப் பிரசங்கஞ் செய்துகொண்டிருந்த அறிவிலியொருவன் "அந்நிய மதஸ்தரின் கடவுளைப்பற்றி ஜாக்கிரதையாயிருங்கள்" என்று சொன்னான். இவனுடைய அபிப்பிராயம் கடவுள் இருவரென்பதுபோலும். அறியாமையே மூடபக்திக்கும், பிடிவாதத்திற்கும், மதோன்மத்தத்திற்கும் காரணமாயிருக்கின்றது. கடவுள் யாவர்க்கும் பொதுவானபொருளென்பதை ஜனங்கள் அறிகிறார்களில்லை. அநேகர் தாங்கள் சொல்லுகிற வார்த்தைகளின் அர்த்தத்தையுணராமல் "கடவுள் ஒருவரே. அவர் சர்வவியாபகர்" என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவருடைய கருத்தில் கடவுள் இவ்வுலகத்திற்கப்புறம் எவ்விடத்திலோ மனிதனைப்போல் உட்கார்ந்துகொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது. 'சர்வவியாபகர்' என்பதின் அர்த்தத்தை அவரிடம் நாம் கேட்கும்பொழுது நியாயப்பொருத்தமில்லாத அநேக வீண்வார்த்தைகளையே சொல்லுகின்றனர். அவர்கள் கடவுளை எவ்வளவுதூரம் மட்டுப்படுத்தக்கூடுமோ அவ்வளவு தூரம் மட்டுப்படுத்தி, அதைத்தாபிப்பதற்காக எத்தனையோ அசந்நியாயங்களையுங் கூறுகின்றார்கள். கடவுளைச் சகுணரென்றும் நிற்குணரென்றும் அனந்த உண்மையான இலக்ஷணங்களைச் சொல்லுவர்; ஆனால் அவர் சொல்லுகிற இலக்ஷணங்களின் அர்த்தத்தையோசியாமல் கடவுளுக்கு மனித உருவத்தைக்கொடுத்து அவருடைய வியாபகத்தைக் குறைக்கப்பார்க்கின்றனர்.

கடவுள் அளவுபட்டவராயிருந்தால் தேச, கால, நிமித்தங்கட்குட்பட்டவராயிருத்தல் ஆவசியகம். அங்ஙனமாயின் அவர் விகாரியாயும், ஆதியந்தமுடையவராயுமிருக்கவேண்டும். அத்தகைய, பொருளொன்றைக் கடவுளென வணங்க நாம் துணிவோமா? துணியோம். நாம் கடவுளுக்கு எவ்வுருவத்தையும் கொடுக்கவேகூடாது. ஏனெனில உருவம் யாவும் இடத்திலடங்கினவை. இடமில்லாமல் எவ்வுருவமுமிருத்தலின்று. மேலும் உருவம் யாவும் ஆதியந்தங்களையுடையன. ஆதலின் எவ்விதரூபத்தையேனுமுடைய ஒரு கடவுள் நித்தியராயிருத்தல்கூடாது. ஆகவே அவர் அளவுகடந்தவராயிருக்கின்றார். அதாவது தேசகாலநிமித்தங்கட்கும், நாம் நினைக்கக்கூடிய எவ்வித அளவிற்கும் உட்படாது அவையாவற்றையும் கடந்துளாரென்பதே. இங்ஙனம் அளவுகடந்த பொருள் ஒன்றாகவேயிருக்கவேண்டும். ஏனெனில், வேறு பொருளுமுளதாயின் அப்பொருளால் மற்றையது அளவுபட்டதேயாகும். ஆயின் அதனை அளவுகடந்ததெனபது தவறு. இதினின்றும் சிரவிக்கத்தக்கதியாதெனின் அளவுபட்டதாய்த்தோன்றும் சகலபொருள்களும் உண்மையில் அளவு கடந்த பொருளேயாதல்வேண்டுமென்பதே. ஆதலின், இப்பிரபஞ்சத்திலோரணுவேனும், அளவு கடந்தவராயும் ஏகராயுமிருக்கப்பட்ட கடவுளுக்குவேறாயில்லை. நம்முடைய சரீரத்தில் ஒவ்வோரணுவும் இப்பிரபஞ்சத்தில் ஒவ்வோரணுவும் கடவுளுடைய அம்சமாகவேயிருக்கின்றன. கடவுள் சர்வவியாபகராயிருத்தலின், ஜடப்பொருள், மனது, சக்தி இவைகளும் நன்மை தின்மை, புண்ணியபாவம், சீதோஷ்ணமுதலிய துவந்துவங்கள் யாவும் அவருக்கு அந்நியமாகவில்லாமல் கடவுளிடத்திலேயே, கடவுளாகவேயிருக்கின்றன. அவருடைய சர்வ இலக்ஷணங்களையும் சேர்த்துப் பார்ப்போமாகில் அவர் சுயம்பிரகாசமான அளவுகடந்த அறிவு சமுத்திரமாயிருக்கிறார். எண்ணிறந்த தோற்றங்களும் அச்சமுத்திரத்தில எழும் நுரை, குமிழி, அலைகளேயாகும். அலைகளின் நாமரூபங்களைக் கவனித்தால் அவைகள் வெவ்வேறாகவும் பலவாகவுமிருக்கின்றன. ஆனால் அவைகள் யதார்த்தத்தில் ஜலமாகவும் ஒரே பொருளாகவுமிருக்கின்றன. அது போன்று பிரபஞ்சத்திலுள்ள பொருள்களின் நாமரூபங்களை நோக்கும்போது அவைகள் வெவ்வேறாயும் பலவாயுமிருக்கின்றன; ஆனால் அவைகள் யதார்த்தத்தில் ஒன்றாகவும் அதுவும் கடவுளாகவுமிருக்கின்றன.

கடவுள் இவ்வுலகத்தைச் சிருஷ்டித்தார் என்று சிலர் சொல்லுகிறார்கள். கடவுள் ஏகரென்றும் சர்வவியாபகரென்றும் நாம ஒப்புக்கொள்ளின், அவர் உலகத்தைச் சிருஷ்டித்தாரென்பது தகாது. கடவுளன்றிப் பிறிதொன்றுமில்லாதிருக்கும்போது அவர் எதைச் சிருஷ்டிப்பது? ஆதலின், உள்ளதெல்லாம் கடவுளேயென்றுணரத்தக்கது. இத்தகைய கடவுளை யாவனொருவன் அனுபவமாயறிகிறானோ அவன் தன்னை யிழந்து

கடவுளாகவே தனிக்கிறான். ஏகத்துவத்தை அல்லது தனது கடவுட்தன்மையை அறியவேண்டுமென்பதே சகலமதங்களுடையவும் எதார்த்தநோக்கம் நமதுயிர்க்குயிரானபொருள் அதாவது நாமே யதார்த்தத்தில் கடவுளாயிருப்பினும் அதை உணர்கின்றோமில்லை. நம்முடைய கண்களை நாமே பொத்திக்கொண்டு வெளிச்சத்தைப்பார்க்கவிரும்பி "கடவுளே உதவி செய்யும். கடவுளே இரட்சியும்." என்று சொல்வோமானால் நாம் எத்தனைய அவிவேகிகளாயிருத்தல்வேண்டும்! நம்முடைய கையையெடுத்துவிட்டால் போதுமானது. சுயம்பிரகாசம் ஒருபொழுதும் மங்குகிறதில்லை. எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டுதானிருக்கின்றது.

ஒருவன் கடவுளை அனுபவித்தறிதலென்றால் அவனது கடவுட்தன்மையை அவனறிதலேயாம். ஏசுவானவர் தம்முடைய தெய்வத்தன்மையை யுணர்ந்தபொழுது "நானும் என் தந்தையும் ஒன்றே" என்றார். ஹிந்து ஞானிகளும் "நான் பிரமம்" என்கிறார்கள். இவ்வுன்னத நிலையைச் சிலர் ஞானத்தினாலும், சிலர் பக்தியினாலும், சிலர் உபாசனையினாலும் சிலர் யோகத்தினாலும் அடையமுயலுகின்றனர். ஞானமார்க்கமாய்ச்செல்பவர் தம் ஞானத் தீயினால் பலபொருள்கள் உளவென்னும் எண்ணத்தைச் சுட்டெரித்து, பிரபஞ்சப்பொருள்களின் நாமரூபங்களைத்தள்ளி மெய்ப்பொருளைக்கண்டு அத்துடன் பிரிவற்றிருக்கின்றனர். இம்மார்க்கத்தில் செல்பவர் சிலரேயாம். பக்தி, உபாசனையென்னு மார்க்கங்களில் செல்லும் அனேகர் ரூபமுள்ள கடவுளை விரும்புகிறார்கள். மனிதர்களில் அனேகருக்கு உருவமுடைய கடவுள்தான் நல்லதென்று ஹிந்துமதவேதத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

புத்தர்(கௌவுத்தமர்) ரூபமுடைய கடவுளை மறுத்துக்கொண்டிருந்தார். ஆனால் அவரிறந்து ஐம்பது வருஷங்களுக்குள்ளாக அவரையே ரூபமுடைய கடவுளாகவைத்துக்கொண்டார்கள். எவ்வுருவத்திலேனும் கடவுளென்னும் பாவனையால பக்தி ஸ்திரப்படுதல் நலமே. ஏசுவானவர் "நான்தான் கடவுளுக்குவழி" என்று சொல்லியிருப்பதுபோல ஒவ்வொருபெரியவரும் "ஏகமாயிருக்கப்பட்ட சத்தியநித்திய கடவுளிடம் சேர்ப்பிக்கிறவன் நான்" என்று சொல்லியிருக்கின்றனர். ஏசுவினிடத்தில் நம்பிக்கையுள்ளவர் அவருடைய உபதேசப்படிக்கே நடக்கட்டும். புத்தரிடம் நம்பிக்கையுள்ளவர் அவருடைய உபதேசப்படியே நடக்கட்டும். ஒருவருடையகொள்கை யதார்த்தம், மற்றொருவருடையகொள்கைபொய்யென்பதுமாத்திரம் சரியன்று. கடவுள் ஒருவராயிருக்கும்பொழுது உயர்ந்த கடவுள் தாழ்ந்தகடவுளென்பதுண்டா? அவ்விதம் நினைப்போமாயின் அது நமது அறியாமையே, ஆகலின், சர்வவியாபகராயிருக்கும் கடவுளின் சொரூபத்தை உள்ளவாறுணர்ந்து அவரையன்றி மற்றொரு பொருளைக்காணுதவராய் இச்சரீரத்திலிருக்கும்பொழுதே அவரது பேரானந்தத்தையடைந்துய்யுமாறு முயல்வோமாக.

V. O. சிதம்பரம்,

தர்மம்.

"அறஞ்செயவிரும்பு" என்கிற நீதிவாக்கியம் ஒவ்வொருவருக்கும் சாதாரணமாய்த் தெரிந்திருக்கிறது. ஆயினும் அதன் உண்மையான கருத்தைச் சரியாய் அறிந்தவர்கள் மிகவும் சொற்பமாகவேயிருக்கிறார்கள். கடவுள் நமக்குக்கொடுத்திருக்கிற பகுத்தறிவைக்கொண்டு, வாஸ்தவத்தில் யார் யார் பாத்திரர்களெனத் தெரிந்து அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். கடவுள் நமக்கு ஐசுவரியத்தை அளித்திருப்பாராயின் அதை ஜாக்கிரதையாயும் விவேகமாயும் நமக்கும் பிறருக்கும் உபயோகப்படுத்துகிறதற்கு நாம் ஜவாப்தாரிகளாயிருக்கிறோம். நம்மாலியன்றவரை சகல ஜீவர்களுக்கும் வேண்டிய சௌகரியங்கள் செய்தல் நமது கடமையாயும் கடவுளுக்கு உண்மையான பணிவிடையாயுமிருக்கின்றது.

நம்முடைய தேசத்தோரெல்லோரும் தர்மசிந்தையுடையவர்கள் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. "இம்மியரிசித்துணையானும்வைகலும், நும்மிலியைவகொடுத்துணமின்" என்ற பழமொழிப்படி நடக்காதவர் உண்மையில் ஒருவருமிலர். எவ்விதமாயாவது நம்முடைய தேசத்தார்கள் அவர்களுடைய தர்ம குணங்களை வெளியிடுதல் காண்கிறோம். ஏழைகளுக்கு உதவிசெய்யாவிட்டாலும் அரிசிமாவும் சர்க்கரையும் எடுத்துக்கொண்டு எறும்புகூட்டங்களுக்கு இரைபோடுவதற்காக எறும்புக்குழிகளைத்தேடிப்போகிறவர்கள் அநேகரிருக்கிறார்கள். வியாதியாயும் நிர்க்கெதியாயுமிருக்கிற பிச்சைக்காரரை கிஞ்சித்தேனும் கவனியாமல் வெள்ளைத்தலையுடைய பருந்துகளைச் சப்தமிட்டு வருத்தி மாமிசம் கொடுக்கிறவர்கள் அநேகரிருக்கிறார்கள். உதவியற்ற விதவை, தாய்தந்தையரில்லாச் சிறுவர்கள் இவர்களுடைய அழுகையைக் கவனியாமல் சரீரசவுக்கியமுடையவராயும், பலசாலிகளாயும், பணக்காரராயும் கூட இருக்கிற பிராமணர்களுக்குச் சாப்பாடு, வஸ்திரம், பணம் முதலியவை கொடுப்பவர் அநேகர். தாய்தந்தையர் ஜீவந்தராயிருக்கும்பொழுது அவர்களுக்குத் தங்கள் கடமையைச் செலுத்தாமல் அவர்களைக் கஷ்டப்படுத்திவந்தபோதிலும் இறந்தபின் அவர்களுடைய உத்தரகிரியைக்காக பிராமணர்களுக்கு ஆயிரக்கணக்காய்ச் சிலவுசெய்பவர் அநேகர். ஜனங்கள் ஒருவருக்கொருவர் அன்னியோன்னியமாயிருந்து உலக காரியங்களிலும் ஆத்மார்த்த விஷயங்களிலும் முதிர்ச்சியடைதற்கு வேண்டிய உதவிகள் செய்யாவிட்டாலும் ஆலயங்களில் மண்டபம் முதலியன கட்டுதற்கும், பள்ளியறையின் கதவுகளில் சொர்ணத்தகடு பதிப்பதற்கும், மடாதிபதிகளுக்கும், அவர்களுடைய ஆடம்பரங்களாகிய யானைகள், குதிரைகள், தாசிகள், மேளகாரர்கள் இவர்களுக்கும் இலட்சக்கணக்காய்ச் செலவுசெய்பவர் அநேகர். இவ்விதமாய் எண்ணிறந்த வழிகளில் பணம் செலவழிக்கப்படுகிறது. நாம் அவைகளை நுட்பமாய்க் கவனித்தால், அய்யோ! அவைகளில் தர்மமென்றுசொல்லத்தக்கது எவ்வளவு சொற்பமாகவிருக்கிறதென்று நாம் காண்போம்.

நாம் ஏழைகளுக்கு உதவிசெய்து அவர்களுடைய தரித்திரத்தை நீக்கவேண்டியது நம்முடைய கடமையே. ஆனால் அந்தகாலத்தில் அவர்களுடைய தரித்திரத்தின் காரணங்களை நன்றாய் விசாரித்து அவர்கள் நம்முடைய இரக்கத்துக்கும் உதவிக்கும் பாத்திரர்களாயிருக்கிறார்களாவென்று நம் திருப்திசெய்துகொள்ளவேண்டும். வயதுசென்றவர்களும் அங்கஹீனர்களும் தங்கள் காலக்ஷேபத்துக்கு வேலைசெய்ய அசக்தர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய துன்பம் அவர்களால் உண்டுபண்ணிக்கொள்ளப்பட்டதல்ல. ஆகையால் அவர்கள் நம்முடைய உதவிக்கும் பரிதாபத்துக்கும் பாத்திரராயிருக்கிறார்கள். இவ்விதமல்லாமல் அநேகர் சூதாட்டம், குடிமயக்கம், துன்மார்க்கமாய்த்திரிந்தும் துன்பம், இழிவு முதலியவைகளைத் தாங்களே வரவழைத்துக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்குத் தங்களுடைய துஷ்கிருத்தியங்களைப்பற்றி இருதயத்தில் வியாகுலமுண்டாகி அவைகளைத் தாங்களே சீர்திருத்த முயலும்வரை அவர்களுடைய செய்கையின் பலன்களை அவர்களே அனுபவிக்கும்படி நாம் விட்டுவிடவேண்டியது. அவர்கள் அவ்விதம் சீர்ப்படுகிறவரைக்கும் அவர்களுக்கு நாம உதவிசெய்தால் அவர்களுடைய துன்மார்க்கத்தைவிடாமல் நடத்தும்படி நாம் உதவிசெய்ததாகும். அப்போது தர்மத்தின் நோக்கம் விபரீதமாய் முடிகிறது. ஏனென்றால் அவருக்கு நாம் செய்கிற உதவி அவருடைய துர்ச்செய்கையை வளர்ச்சிப்படுத்தி அவருக்கும் பிறருக்கும் கெடுதியை விளைவிக்கிறது. இதுதவிர நாமே அவர்களுடைய பாவத்துக்கு காரணஸ்தர்களாகிறதுமல்லாமல் நம்முடைய செய்கைகளுக்கும் நாம் நியாயமாய்ச் சரிசொல்லவேண்டியவர்களாகிறோம்.

அதை வேறுவிதமாய் யோசித்துப்பார்த்தாலும் பாத்திரம் அறியாமல் தர்மம் செய்வது பெரியகுற்றமாக இருக்கிறது. தகாதவர்களுக்கு உதவிசெய்தால் தக்கவர்களுக்கு உதவிசெய்யாமல் நீக்கிவிடுதலையொக்கும். எங்ஙனெனில் அபாத்திரர்களிலும் பணம் விரயம் செய்யப்படுவதால் ஐசுவரியவானை யாருக்கு உதவிசெய்யவேணுமென்று கடவுள் ஆக்ஞாபித்திருக்கிறாரோ, அவர்களுக்கு அவன் உதவிசெய்யக்கூடாமல் போய்விடுகிறது. அவனிடத்தில் கடவுள் வைத்திருக்கிற நம்பிக்கைக்கு விரோதமாய் அவன் செய்வதிலிருந்து தனக்குத் தண்டத்தை அதிகரிப்பித்துக்கொள்ளுகிறான். யுத்தகளத்தில் பசியாயிருக்கிற போர்ச்சேவகர்களுக்கு சாப்பாடுகொடுக்கும்படி நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் அப்போர் வீரர்களுக்குக் கொடுக்கவேண்டிய ஆகாரங்களைத் தாங்களே அபகரித்துக்கொண்டாலும் அல்லது அச்சேவகர்கள் தவிர மற்றவர்களுக்குக் கொடுத்தாலும் அது எவ்விதம் குற்றமாகுமோ அவ்விதமே வாழ்க்கைப் போரில் பசியால் வருந்தும் குழந்தைகளுக்கு உதவும்படி கடவுளால்

நியமிக்கப்பட்டிருக்கிற ஐசுவரியவான்கள், அவரால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள செல்வத்தைத் தாங்களே அபகரித்துக்கொண்டாலும் அல்லது விவேகமின்றி அபாத்திரருக்குக் கொடுத்தாலும் குற்றஞ்செய்தவர்களாகின்றார்கள். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய உதவியற்ற சகோதரரின் சுதந்தரங்களை உள்ளபடி அறிந்து நமக்குப்பொதுவாயுள்ள தகப்பனாகிய கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கிறவைகளைப் பகுத்து அனுபவிப்போமானால் கடவுளுடைய நேசத்துக்கும் இரக்கத்துக்கும் விரோதமாய் அடிக்கடி உண்டாகிற கூக்குரலானது நின்றுபோய்விடும்;

நம்முடைய தேசத்தார்கள் தர்மத்தின் யதார்த்தசொரூபத்தை எப்போது கண்டறியப்போகிறார்கள்? தரித்திரமின்றி நல்லநிலைமையிலிருக்கிற பிச்சைக்காரர்களும் நன்றாய்ச் சாப்பிடுகிற சோம்பேறி உத்தமர்களும் எப்போதொழிவார்களோ! தெரியவில்லையே! பரம்பரையாய்ச் செய்துவரும் யாசகத்தொழில் லாபத்தைக்கொடுத்தபோதிலும் பரிசுத்தமானதல்லவென்றும் சரீரம் சவுக்கியமாயும் அவயவங்களில் யாதொரு பங்கமில்லாமலுமிருக்கும்போது அவ்விதம் பிச்சைக்குப்போதல் மகா கேவலமென்றும் எப்போது எண்ணப்போகிறார்களோ! அதுவும் தெரியவில்லையே!.

C. முத்துசுவாமிபிள்ளை.

ஆலயக்கலக நிவாரணோபதேசம்.

இந்நாட்டில் ஹிந்துக்களில் சற்றேரும் மற்றேரும் வழிபடும் ஆலயங்கள், சிவாலயம் பெருமாளாலயம் என இருவகை. இவற்றுள் சிவாலயங்களில், சமீபகாலம்வரை யாதொரு கலகமுமின்றி சைவமதானுசாரிகள், தந்தமக்குரிய நிலையிலிருந்து வழிபாடுசெய், பொது நோக்காய் நடத்திவந்ததினால், யாவரும் அவைகளை ஒப்பி அடங்கியிருந்தார்கள். சிறிதுகாலத்திற்கு முன்னர், சிலகீழ்ஜாதிசைவர், ஆலயப்பிரவேசத்திற்கு எத்தனப்பட்டமையால் கலகம் விளைந்து அதிலின்றும் தந்தனவனாசமும், வீடுகளை எரிவாய்ப்படுத்தலும், புரவழிப்பும், கூட்டக்கொள்ளையும், தேசபாலகர் வலையுறுதலும். துஷ்டநிக்கிரக அசாத்தியத்தால் சிஷ்டநிக்கிரகம் சம்பவித்தலும், இத்தகைய வேறு பல தீங்குகளும் திரண்டு, இந்நாட்டை இன்னும் விடாது கஷ்டப்படுத்திக் கொண்டிருப்பதை யாவரும் அறிவார்கள். இது விஷயமாய் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் விரித்துரைப்போமாக.

சிவாலயம் போலன்றிப்பெருமாள் ஆலயங்களில் வெகுகாலமாய்க் கலகங்கள் உண்டாகி இன்னும் ஓய்வின்றிப் பெருகிவருகின்றன. திருஷ்டாந்தமாக ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம், முதலான விசேஷ க்ஷேத்திரங்க

விலக்காணலாம். இந்நாட்டை ஆங்கிலேயர் கைக்கொண்ட காலத்திற்குச் சமீபமாய்க் கலகம் ஆரம்பித்து, கும்பகோணம், திருவெள்ளூர், திருவஹீந்திரபுரம், ஸ்ரீபெரும்புதூர், மன்னார்கோவில் முதலான இடங்களில் பரவினதுமல்லாமல், பாண்டிநாட்டிலும் பிரவேசித்து விட்டது. ஸ்ரீவில்லிபுத்தூரிலும், திருக்குறுங்குடியிலும் 10 வருஷங்களுக்கு முன் உண்டான கலகம், கிரிமினல், ஸிவில் என்னும் இருவகைத்தான நியாயஸ்தலங்களுக்கு எத்தனை முறையோ சென்றும், இன்னும் ஓர் முற்றுப்பெறாது இழுபட்டு, அதிற் சம்பந்தப்பட்டவரைத் தீராக்கவலைக்குள்ளாக்கிப் படுகுழியிலாழ்த்தி வருகிறது. இவ்விதகலகத்தின் காரணங்களை நன்கு விளக்கி அவைகள் சாரமற்றவை யெனக்காட்டினால் நம்மவர் அவைகளுக்கு இடங்கொடாது, ஒற்று வாழ்ந்து, பெருமாள் கோவில்களைப் பெருமையருள் கோவில்களாக வைத்து வருவார்களென மதித்து, இவ்விஷயமின்று வரையலாயினேம்.

ஜகத் ரக்ஷகரான நம் பெருமாள்கோவில்களில், கலகத்திற்கு ஆஸ்பதமாய் இருப்பவைகளுள் முக்கியமாய தொன்று நாமமேயாம். தமிழ் நாட்டில் பெருமாள் கோவிலைப் பரிபாலித்து வரும் வைணவர்கள், வடகலையார், தென்கலையார் என இருவகுப்பினர். இவ்விருவகுப்பினரும், முக்கியமான அம்சங்களில் ஐக்கியப்பட்டுள்ளாராயினும், நாமம் போல் சிலமுக்கியமற்ற விஷயங்களில் வேறுபாடுடையினர். இருவகுப்பினரும், தத்தமக்குரிய நாமத்தை நெற்றியில் தரித்தே, எல்லாக்கருமங்களையும், புரியும் முறையுடையினர். மானிட அரசன் ஒருவனுக்கு உபசாரணைகள் செய்வது போல கடவுளுக்கும் ஆராதனத்தில் உபசாரணைகள் செய்து வருகின்றார்கள். அவைகளுள் தாம்தாம் நெற்றியில் தரித்து வருவதான குறிகளை அவருடைய நெற்றியிலும் சார்த்துவது வழக்கமாயிருக்கின்றது. இஃது விசாரணைக் குறையைக் காட்டுகின்றதன்றோ? எவ்வாறெனில் கூறுவாம். அலங்காரமாக நினைத்து இடப்படும் புண்டரம் என்னும் குறியானது ஊர்த்துவபுண்டரம் என்றும், திர்யக்புண்டரமென்றும் இருவகைத்தாம். ஊர்த்துவபுண்டர மென்பது மேல் நோக்காகச் செவ்வேயிடப்பட்டது. மற்றது குறுக்கே யிடப்பட்டது. முந்தியது, வடகலை தென்கலை நாம உருக்கொண்டு மாறியது, பிற்காலத்தி லென்று துலங்குகின்றது. முற்காலத்திலோ மூக்கின் மேல்பாகமுதல், நெற்றி உச்சியளவாக, ஒரே கோடாய் எழுதப்பட்டு வந்தது. அது கஸ்தூரிதிலகமென்றும், கஸ்தூரி கலிதோர்த்துவ புண்டரதிலக மெனறும், கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. திருமண் என்னும் வெள்ளை மண்ணால், பகவத்பிம்பங்களுக்கு முற்காலத்தில் வடகலை தென்கலை நாமம் போல் புண்டரம் போட்டுவந்ததாய்க் கிரந்த ஆதாரங்கள் கிடையாது. இதெல்லாம் பிற்பட்ட வைஷ்ணவாசாரியர்கள் காலத்துண்டான நவீன ஏற்

பிரகேள். வேதபுராண இதிகாசங்களில் ஆதாரம் உண்டாயின் நண்பர் யாரும் எடுத்துக்காட்டற் பாலதே. இது நிற்க,

இப்போது வடகலை தென்கலை நாமம், அச்சேறி, புஸ்தகங்களிலும் சிரகவாச நிலைகளிலும் போடப்பட்டுவரும் முறையைக் கவனிப்போமாக. தென்கலை நாமமிப்போது இரண்டு பாதங்களை ஓர்பங்கயத்தின் மீது நிறுத்தி, அப்பாதங்களில் ஸாமுத்திரிகாலக்ஷண சாஸ்திரத்திற் கூறப்பட்டுள்ள, சங்கு-சக்ர-கற்பக-த்வஜ-தாமரை முதலிய உத்தமலக்ஷணங்கள் நிறப்படுகின்றன. இதனால் புராதன அர்த்தம் என்னவாயினும் இப்போது இந்நாமத்தின அர்த்தம் பகவானுடைய இரண்டு பாதங்களையும் நெற்றியில் அறிகுறியாய் அல்லது இலக்ஷயமாய்த தரித்தல் என்றே ஆகிறது. இப்படியே வடகலை நாமத்திற்கும் ஒருபாதத்தை நெற்றியில் தரித்தலென்றே அர்த்தம் சொல்லக்கூடும். ஆயின் அடியாரான நாம் நெற்றியில், நாம் வழிபடுகடவுளான ஸ்ரீமந்நாராயணரின் பாதத்தை அல்லது பாதங்களைத்தரித்தல் உசிதமே. அது நம் விசுவாஸத்தையும் அடக்கத்தையும் நன்கு குறிக்கிறது. ஆனால் கடவுளது திருமுகமண்டலத்தில் பாதம்அல்லது பாதங்களைச் சார்த்துதல் உசிதமாகுமோ? அல்லது அலங்காரந்தானா? விவேகிகளே! சற்று ஆலோசித்து உத்தரமுரைப்பீராக. அது கடவுளை அவமதித்தலே யாகுமென்பது, எமது துணிபு. ஆகவே புராதனவழக்கத்தை நோக்கினும், நாமத்தின் தற்கால அர்த்தத்தை நோக்கினும், வடகலை தென்கலை நாமங்கள் நாராயணமூர்த்திக்கு ஒவ்வா தென்பதும், அவைகளை எழுதுதல் அனுசித மென்பதும் நன்கு புலப்படும்.

ஆனாலும் மேற்கூறியவற்றால் இப்போது ஆலயங்களில் தொன்றுதொட்டுப் போட்டு வந்திருக்கிற, வடகலைதென்கலை நாமங்களை யெல்லாம் இடித்து அகற்றிவிடவேண்டு மென்பது எமது கருத்தன்று. அங்ஙனம் கூறின் செய்வாருளரோ? சொன்ன வாய், வலிக்குமதொழிய நடப்பது யாதொன்றுமில்லை. இதுவரைப்போனது போகட்டும். இனியேனும் பகவானது விக்கிரகத்தின் நெற்றியில் நூதனமாய் அவர் திருவடியை யிடும் வழக்கம் நடைபெறாதொழிய வேண்டுமென்பதே நம்கருத்து. பகவானுக்குக்கிரீடம், கலசம், பதக்கம் முதலான ஆபரணங்களணிதல் போல், நெற்றியில் அலங்காரமாக, கஸ்தூரிதிலகம் இட, நம்மவர் இணங்கி, வழிபட்டு, ஆலயங்களை வைஷம்யமற்ற அன்பு நிறைந்த, தேவஸந்நிதானங்களாக்கிப் பரிபாலித்து வருவார்களாகவும்.

S. R. கிருஷ்ணமாச்சாரியார் B. A.

ஜடபாதர் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

புண்ணிய சீலனான பரதமகாராஜாவும் தமது பிதுர், பிதாமகர்களைப் போலவே பிரஜைகளை மிகவும் பிரியத்துடன் பாதுகாத்தும், எக்கியங்களினாலே பகவானை ஆராதித்தும், அவ்வாராதனத்தாலுண்டாகும் புண்ணியத்தைப் பரப்பிரம்மமாயும், எக்கியபுருஷராயும், சகலதேவதாசப்தங்களுக்கும், மந்திரங்களுக்கும் அர்த்தசொரூபரானமையின சாக்ஷாத் கர்த்தாவாயும், பரதேவதையாயும், பகவானாயுமிருக்கிற வாசுதேவரிடத்தில் சமர்ப்பித்தும், வந்தார். இவ்விதமாய்ச்சகல கர்மங்களையும் நிஷ்காமியமாகச்செய்து வந்ததினால் அவருடைய அந்தக்கரணம் பரிசுத்தத்தையடைந்து பகவானுடைய பாதகமலங்களைவிடாது பற்றினதால் சகலமனோமலங்களும் கழன்று, பக்தசிரோன்மணியாய் விளங்கினார். இந்தப்பிரகாரம் பக்தி முதிர முதிர, கோடிவருஷம் அனுபவிக்கினும் தொலைதலில்லா இராச்சிய போகத்தில் வெறுப்படைந்து, சதாபகவானுடைய பாதாரவிந்தங்களையே ஸ்மரிப்பதில் மோகமுடையவராய், தமது இராச்சியத்தைப் பிள்ளைகளுக்குச் சரிபாகமாய்ப் பிரித்துக்கொடுத்துவிட்டு, தம்முடையகிரகத்தில் நின்றும் புறப்பட்டுக் கண்டகீநதியினால் நாலுபக்கமும் பரிசுத்தஞ்செய்யப் பெற்ற புலகாசிரமவனத்தையடைந்து, அவ்விடத்தில் ஏகாகியிருந்து நானாவிதபுஷ்பங்கள், துளிர்கள், துளசி, சுத்தோதகம், கந்தமூலபலங்கள் இவைகளால் ஸ்ரீபகவதாராதனம் பண்ணிக்கொண்டு, பரிசுத்தராயும், விஷயஅபிலாச மொழிந்தவராயும், சாந்தியையடைந்தவராயுமிருந்தார். இந்தப்பிரகாரம் கிருஷ்ணசனருபமான வஸ்திரத்தினாலேயும், திரிசந்தியகாலங்களிலும் ஸ்நானம் செய்வதினால் ஈரமாயும், வகிரங்களாயிருக்கும் ஜடைகளினாலும பிரகாசிக்கிறவராய், பகவானிடத்திற் செலுத்தும்பக்தி மிகுதியாற் பெருகாநின்ற ஆனந்த பாஷ்பங்களினால் தழையப்பட்ட பார்வையையுடைய நேத்திரங்களுடன் தமது பக்திக்கிரங்கும் பகவானுடைய சரணாரவிந்தங்களி னின்றொழுகும் பரமானந்த மென்னும் தேன் நாலுபக்கங்களிலும் பெருகஆனந்தபரவசராய் அதன் மத்தியிலிருந்தார்.

இவ்விதமாகவிருக்கும் நாளில் ஓர்நாள் அந்தப்பரதரானவர் நதியின் பக்கத்தில் சென்று அவசியமான நித்தியநைமித்திக கர்மானுஷ்டானங்களைச் செய்து முடித்து, பிரணவத்தை யுச்சரித்துக்கொண்டு ஒருசாம பரியந்தம் அந்த நதித்தீரத்திலேயே யிருந்தார். அப்போது ஒருமான பேடானது தாகமிகுதியால் நதிக்கு வந்து அவருடைய சமீபமாக ஜலபானம் பண்ணிக்கொண்டிருக்கையில் ஒரு சிங்கம் உலகமெல்லாம் நடுக்கும்படி காச்சித்தது.

அந்நாதத்தைக்கேட்டு, சுபாவமாய் அதைரியத்தை யுடையதான மான்பேட்டானது மிகவும் பயத்தினால் திடுக்கிட்டு, சமீபத்திலிருந்த உயர்ந்தகரையிலே யெழும்பிவிழுந் திறந்தது. இவ்விதமாய் அந்த மானுக்குண்டாகிய பயத்தினாலும் அதனிமித்தம் கரையில்தாவும் பொழுதுண்டான விசையினாலும் அதனுடைய கெர்ப்பமானது நழுவி, பிரவாகத்திலே விழுந்தது. இவ்வணம் தாயையிழந்து, இரக்ஷிப்பார் யாருமின்றி, ஜலத்தினால் கொண்டுபோகப்பட்ட மான்குட்டியைச் சமீபத்திலிருந்த இராஜரிஷியான பரதர்கண்டு, அதன்மேல் இரக்கங்கொண்டு, ஆற்றிலிறங்கி, அந்த மான் குட்டியைக் கையிலெடுத்துக்கொண்டு, தமது ஆசிரமத்தையடைந்தார். அந்த மான்குட்டியின்மேல் மிகவும் அபிமானத்தையுடையவரான பரதர் 'ஆ. ஹா! ஆச்சரியம்! இந்தக்குட்டியானது காலச்சக்கரத்தினுடைய வேகத்தினாலே தன்னுடைய கூட்டமான பந்துக்களினால் விடப்பட்டதாய், என்னையடைந்து, என்னையே தாயென்றும், தகப்பனென்றும், பிராதாவென்றும், பந்துவென்றும், தன்னுடைய கூட்டமென்றும் எண்ணிக்கொண்டு மற்றொருவனையும் அறியாமல் என்னிடத்திலேயே மிகவும் விசுவாசத்தையுடையதா யிருக்கின்றது. ஆகையாலென்னையே கதியாக அடைந்திருக்கும் இந்த மான குட்டியினுடைய போஷணம், இரக்ஷணம் முதலானதுகள் என்னாலேயே செய்யத்தக்கன. சதாசாரநிஷ்டரானவர்களும், சாந்தியையுடையவர்களாயுமிருக்கிற பெரியோர்கள் இப்படிப்பட்ட விஷயங்களில் தங்களுடைய பிரயோஜனங்களைப் பாரார்களல்லவா?' என்றிந்தப் பிரகாரம் தமக்குள்ளே ஆலோசித்துக் கொண்டு அந்த மான் குட்டியினிடத்தில் மிகவும் பிரீதியுடையவராய், அதற்குத் திருணங்களினால் போஷணங்கொடுப்பதிலும், செந்நாய்கள் முதலான துஷ்டர்களினின்றும் உபத்திரவம் வாராமல் இரக்ஷிப்பதிலும், அதனுடம்பைச் சொறிகிறதினால் சந்தோஷமுண்டுபண்ணுவதிலும் அதனை முத்தமிட்டுக்கொண்டு லாலனை பண்ணுவதிலும் நேரத்தைப் போக்கினதினால் அவருடைய ஸ்நானுஷ்டி நியமங்கள், பிராணாயாமங்கள், பகவதாராதனம் முதலான தபசுகள் நாள்தோறும் ஒவ்வொன்றாய்க் குறைந்து சிலநாளைக்குள் எல்லாம் விடப்பட்டுப்போயின.

இப்பிரகாரம் இராஜரிஷியானவர் மான்குட்டியின்மேல் மிகுந்த ஆசக்தி யுடையவராயிருந்தார். இருக்கும்போதும், படுக்கும்போதும், சஞ்சரிக்கும்போதும், ஸ்நானஞ் செய்யும்போதும், போஜனஞ்செய்யும்போதும் அதன் ஞாபகமே அவர்க்குள்ளது. தர்ப்பை முதலானதுகளைச் சம்பாதித்துக் கொண்டுவரும்போதும் நாய் நரி முதலானதுகள் தம்முடைய மான்குட்டியை உபத்திரவிக்குமென்றெண்ணி அதையும் கூட்டிக்கொண்டே வனத்திற் பிரவேசிப்பார். சிலசமயங்களில் பிரியத்தினால்

அந்தமான்குட்டியை எடுத்துத்தோளில் வைத்துக்கொண்டு போவார். சிலசமயங்களில அந்த மான்குட்டியைப்பார்த்து "வாராய் குழந்தாய்! உனக்கு நான்குதிக்கிலும் நன்மையுண்டாகக்கடவது" என்றாசீர்வசனங்களைச் செய்வார். அந்தமான்குட்டியானது, தானேவெளியிற் சென்றுமேயும் பருவத்தை யடைந்தபொழுது, ஆசிரமத்திற்குத்திரும்பிவரத் தாமதித்த சமயங்களில் மிகவும் மனவருத்தமடைந்து "ஏ! குழந்தாய்! நான் நிர்த்தயனும், பாக்யஹீனனுமிருக்கிறேனென்று வாராமறபோய்விட்டாயோ! உன்னை நான் திரும்பவும் பார்ப்பேனு! சூரியனும் அஸ்தமிக்கப்போகிறானே. இன்னும் நீ வந்து சேரவில்லையே" என்று தமக்குள்ளேயே சொல்லிக்கொண்டு துக்கிப்பார். இவ்விதமாக மான்குட்டியே சிந்தையாக விருந்த பரதருக்கு மரணகாலம் சமீபித்தது. அந்தச்சமயத்திலேயும் பக்கத்திலிருந்த மான்குட்டியினிடத்திலேயே மனதையுடையவராயிருந்ததினுல் அஞ்ஞானியையபோல வேறொரு ஜென்மமாகிற மான்சரீரத்தை யடைந்தார். ஆனுல் முன்செய்த தபோவலியால் பூர்வஜென்ம ஞானத்தையுடைத்தாயிருந்ததினுல் "ஆ! ஹா! என்ன கஷ்டஸ்திதியை யடைந்தேன். நான் ஆதமநிஷ்டாளுடைய மார்க்கத்தினின்றும் பிரஷ்டனுகிவிட்டேன். சகல சங்கத்தையும் விட்டு நிர்ஜனமாயும், மகாபுண்ணியமாயுமிருக்கிற ஆரண்ணியத்தையடைந்து, சர்வபிராணிகளுக்கும் ஆத்மாவாயும், பகவானுயுமிருக்கிற வாசுதேவரிடத்தில் ஆசக்தியையுடைத்தாயிருந்த என்னுடைய மனமானது மான்குட்டியைச் சென்றுபத்தியதென்ன ஆச்சரியம்!" என்றிந்தப்பிரகாரம் தமக்குள்ளேயே விசாரித்துகொண்டு மிகவும வருத்தத்தை யடைந்தவராய், தம்முடைய மாதாவான மிருகஸ்திரீயை விட்டு விட்டு, ரிஷிகணங்களுக்கு இஷ்டமாயும், பகவத்க்ஷேத்திரமாயும், தாம்முந்தின ஜென்மத்தில் தபசு செய்துவந்த இடமாயு மிருந்த புலகாசிரமம் என்று சொல்லப்பட்ட சாளக்கிராம க்ஷேத்திரத்தை யடைந்து விஷய சங்கத்தினின்று மிகவும் நொந்தவராய், உலர்ந்தபுல், கொடிமுதலானதுகளைப் பக்ஷித்துக்கொண்டு தனிமையாகவே சஞ்சரித்துக்கொண்டிருந்தார். இங்ஙனம் சிறிதுகாலம் செல்லுகையில் அவருடைய மிருகஜென்மத்திற் கேதுவாகிய கருமத்தின் ஒழிவுவரவே அவரும் மிருகசரீரத்தை விட்டு விட்டார்.

மிருகஜென்மம் நீங்கினபிறகு பரதரானவர், அங்கிரசகோத்திரத்திற் பிறந்தவர்களுக்குள் சிரேஷ்டராயும், அதிதிபூஜை, பொறுமை, கர்மானுஷ்டானம், ஆத்மக்ஞானம் இவைகளுடனே கூடினவராயும், தம்முடைய ஜேஷ்டபாரியினிடத்தில் உத்தமகுணங்களுடைய ஒன்பதுபிள்ளைகளைப்பெற்றவராயு மிருந்த ஒருபிராமண சிரேஷ்டருக்கு அவருடைய கனிஷ்டபாரியினிடத்தில் ஒருபுத்திரராக அவதரித்தார். அந்தவிப்பிரஜென்மத்திலேயும் சுவஜன பந்துகளுடைய சகவாசத்தினின்று மிகவும்

ப்பக்தவராய், பகவானுடைய சரணாரவிந்தங்களை மனதினால் தியானித்துக்கொண்டு, பகவதனுக்கிரகத்தினாலே பூர்ணமென்ற ஞானங்களையுடையவராய், ஜனங்களுக்குத்தம்மைப் பயித்தியகாரனைப்போல் தோற்றுவித்துக்கொண்டிருந்தார். பிதாவானவர் புத்திரனைமேல அதிகவாத்சல்லியமுடையவராய் கருமநியமங்களைப் படிப்பிக்க ஆரம்பித்தார். ஆனால் பரதரோ தகப்பனார் அலுத்துவிட்டுவிடும்படிக்கு, கருமங்களிலொன்று சொல்ல ஒன்றைச்செய்துகொண்டு வித்தியாசம் பண்ணிவந்தார். பின்னர் வேதங்களைச்சொல்லி வைக்கவேணுமென்று பிதாவானவர் காயத்திரியை எவ்வளவோகாலம் சொல்லி வைத்தும் அதைக்கிரகித்ததாகத் தோற்றுவித்திலர். இந்தப்பிரகாரம் சவுசம், அத்தியயனம, விரதநியமங்கள், குருசிசுருஷை, அக்கினிசிசுருஷை முதலிய கருமங்களை எவ்வளவோ நன்றாகச்சொல்லிவைத்தும் புத்திரன் கிரகிக்கவில்லையென்றமனோவியாகுலத்தையுடைய பிதாவானவர் விருத்தகாலஞ் சென்று மரித்தார். பின்னர் அவருடைய கனிஷ்டபாரியும் தன்னுடையகுழந்தைகளான பரதனையும் மற்றொரு பெண்ணையும் சக்களத்திகையில் ஒப்புவித்து அநுமரணத்தினாலே பதிசாலோக்கியத்தை யடைந்தாள்.

பரதனை அவருடைய பிராதாக்கள் பயித்தியகாரனென்றெண்ணி சிக்ஷிக்காமல் விட்டு விட்டார்கள். பரதரோ பிராகிருதாளான மனுஷியபசுக்களாலே எந்தெந்தவேளைகளில் பயித்தியகாரனென்றும் மூடனென்றும் செவிடனென்றும் சொல்லப்படுகிறாரோ, அந்தந்த வேளைகளில் மூடனைப்போலவும், பயித்தியகாரனைப்போலவும், செவிடனைப்போலவும் வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருப்பார். மற்றவர்களாலே பலாத்காரமாய் ஏவப்பட்டவராய் வேலைகளைச்செய்வார். தாம் செய்த வேலைகளுக்குக் கூலியாகக் கிடைக்கப்பட்ட அன்னம் அற்பமாயிருந்தாலும் மிகுதியாயிருந்தாலும் அதையே பக்ஷிப்பார். ருசிபார்த்து பக்ஷிக்கிறதில்லை. மானாவமானங்களினாலுண்டான சுகதுக்கங்களில் தேகாபிமானமில்லாதவராயும், அழுக்கடைந்த கந்தையை அரையிலே தரித்தவராயும் எல்லாராலும் பரிகசிக்கப்பட்டவராயும் சஞ்சரித்துக்கொண்டிருந்தார். ஒருநாள் அவர் ஓரிடத்திற் பரண்கட்டி அதன்மேலிருந்துகொண்டு காட்டுமிருகங்கள் வந்து விளைவை அழித்துப்போடாமற் காத்துக்கொண்டிருக்கும் பொழுது, புத்திரோற்பத்திக்காகப் பத்திரகாளிக்குப் புருஷனாகிற பசுவைப் பலிகொடுக்கப்பிரார்த்தனை செய்திருந்த ஒருசூத்திரன் தான்பலிகொடுப்பதற்காகக் கொண்டுவந்த புருஷன் அர்த்தராத்திரியில் தெய்வபலத்தினால் தப்பித்துக்கொண்டுபோய்விட்டானென்றறிந்து அவனைத் தேடிக்கொண்டு வருவதற்காக வேலைக்காரர்களையேவ, அவர்கள் தப்பி ஓடினவனை எங்குத்தேடியுங் காணாமல் பரணருகில் வந்தார்கள்.

வந்தவர்கள் பரணின்மேலிருக்கும் பாதரைப்பார்த்து 'நமது எஜமானுடைய கருமமூர்த்திக்குப் புருஷபசு கிடைத்தது' என்றெண்ணிக்கொண்டு மலர்ந்தமுகத்தை யுடையவர்களாய், அவரைக்கயிற்றினாலே நன்றாகக்கட்டிக்கொண்டு காளிகோவிலுக்குச் சமீபத்தில்வந்து அவரை ஸ்நானம் பண்ணிவைத்து, நூதன வஸ்திரம் தரிப்பித்து, நல்லசந்தனம், புஷ்பமாலை, திலதம் முதலானதுகளினாலே யலங்கரித்து திருப்தியாகப்போஜனம் செய்வித்து, கீதங்கள், மத்தளங்கள், பேரிவாத்தியங்கள் முழங்க, அந்தப் புருஷபசுவைப் பலிகொடுக்கிற விதிப்படி, பத்திரகாளியினுடைய எதிரே நிறுத்தினார்கள். பின்னர் அந்தச் சூத்திரனுடைய புரோகிதனானவன் அந்தப்புருஷபசுவினது இரகதமாகிற மத்தியத்தினாலே அந்தப்பத்திரகாளியைத் திருப்திசெய்துவைக்க வேணுமென்றெண்ணி, காளிமந்திரத்தினாலே மந்திரிக்கப்பட்டும், மகாதீக்ஷண்ணியமாயும், குரூரமாயுமிருந்த சத்தியைக் கையிலேயெடுத்தான்.

(இன்னும் வரும்)

V. சண்முகம்பிள்ளை

இல்லறதர்மம்.

(60-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

இங்ஙனம் பெண்களுக்குக் கல்விபயிலும்படியான கன்னிப்பருவம் நீங்கிக் கடிமணப்பருவம் வருகின்றது. அக்காலையில் பெண்ணானவள் தாய்தந்தையர்கள் ஆதீனத்திலிருப்பதால், அவர்கள் யாரைப் பர்த்தாவாகக்குறிப்பிடுகின்றார்களோ, அவரையே தன்னுயிர்க் கணவனாகப் பாவித்துச் சந்தோஷித்திருக்க வேண்டுமே யல்லாது, 'இன்னானைத்தான் விவாகஞ் செய்துகொள்வேன்' என்று குறித்தலாகாது. ஏனெனின், தான் குறித்த புருடனை மணஞ்செய்து கொள்வதில், தனபெற்றோர்களாலாவது அப்புருடனாலாவது, அவன் தாய்தந்தையர்களாலாவது இன்னும் ஏனைய காரணங்களினாலாவது விக்கினம் நேரிடும் பக்ஷத்தில், அவள் கற்பிற்கழிவுண்டாகின்றது. ஆகையால் கற்பே கலனாக வுடைய பெண்ணானவள், பெற்றோர் தனக்குக் குறிப்பிட்ட புருடனையே விவாகஞ் செய்துகொள்ளுவாளே யன்றி வேறொருவரையும் மனதிற்கூட ஒருபோதும் நினைக்கமாட்டாள் என்பது பின்வரும் அடியார் சரிதையால் இனிது விளங்கும்.

திருநாவுக்கரசுநாயனார் தமக்கையாராகிய திலகவதியாரை, சேனாதிபதி யுத்தியோகத்தி லமர்ந்திருந்த கலிப்பகையாருக்கு விவாகஞ் செய்துகொடுப்பதாக, அவர் பெற்றோர் தீர்மானித்திருந்தார். விவாகம் நடக்குமுன், கலிப்பகையார், அரசன் ஆணையின் பிரகாரம் அவன் பகைஞராகிய வடதேசத்தரசரிருக்கு மிடஞ் சேனைகளோடுஞ் சென்று, அவர்களோடு நெடுநாள் யுத்தஞ் செய்தார். அங்ஙவ்விதம் நிகழும் காலத்தில்,

இங்கே திலகவதியாருடைய தந்தையார், தேகவியோக மடைந்தார். அப்போது அவர் மனைவியாரும் சககமனஞ் செய்தார். இதனால் மிகக்கவலையுற்றிருந்த திலகவதியாரையும், அவரதிளைய சகோதரராகிய திருநாவுக்கரசு நாயனாரையும், அறிவாலமைந்த பெரியோர்கள் ஒருவாறு தேற்றித் தந்தை தாயார்க்குச் செய்யவேண்டும் அந்திய கர்மங்களை, அவர்களைக்கொண்டு முடிப்பிவித்தார்கள். அக்காலத்தில் வடக்கே யுத்தஞ்செய்து கொண்டிருந்த கலிப்பகையார் பூதவுடம்பை விட்டுப் புகழுடம்பைப் பெற்றனர். இச்செய்திகேட்ட திலகவதியார், பெற்றோர் தம்மை அவருக்குக் கொடுக்கத் தீர்மானித்திருந்தமையால், தமதுயிர் அவருக்கே உரியதென்று, தம்முயிரையும் அவருயிரோடும் இசைவிப்பதாகப் புகன்று, இறக்கத் துணிந்தனர். அதுகண்ட அவர் தம்பியார், திலகவதியாருடைய திருவடித்தாமரைகளில் விழுந்து அழுது, 'அடியேன் நம்முடைய பிதாமாதாக்கள் இறந்தபின்னும், உம்மையே அவர்களாகப் பாவித்துப் பூசிக்கலாம் என்றன்றோ உயிர்வைத்துக் கொண்டிருக்கிறேன்? அடியேனைத் தனியே கைவிட்டிறப்பீராயின், அடியேன் உமக்கு முன்னமே உயிர் நீப்பேன்' என்றார். திலகவதியாரதைக்கேட்டு, தம்பியின் உயிரை இரக்ஷிக்கும் பொருட்டு தாம் நினைத்த பிரகாரம் செய்யாமல், உயிர்தாங்கி, வேறொருவரையும் விவாகஞ்செய்து கொள்ளாமல் ஜீவகாருண்ணிய முள்ளவராய் வீட்டிலே தவஞ்செய்துகொண்டிருந்தார்.

இங்ஙனம் திலகவதியார் விவாகஞ் செய்து கொள்ளா திருந்தது தன் கற்பை நிலைநிறுத்தவன்றோ? ஆகையால் பெண்ணானவள் தாய்தந்தையர் இருக்குங்காலத்தில் தானே கணவனைக் குறிப்பிடாமல், கல்வி, பொறுமை, தெய்வபக்தி முதலிய நற்குணங்களமைந்த ஓர் புருடன் தனக்கு வாய்க்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்பதே உசிதமாகும். ஆனால்,

"பழுதறு தந்தை தாய்தமர் தலைவ ரிவ்வெனிற் கன்னியர் பரிவால்
விழைவொடுந் தமது மரபினுக் கேற்ற வொருவனை வரித்திடல் விதியாம்"

என்று காசிகாண்டத்திற் கூறியிருக்கிற பிரகாரம், ஒருகன்னிகைக்குப் பெற்றோர்களாவது, சுற்றத்தார்களாவது, சகோதரர்களாவது இல்லாவிடின், அக்கன்னிகை தன்குலத்திற் கேற்றவொருவனை, அன்புடனே தேர்ந்தெடுத்து விவாகஞ் செய்து கொள்ளல் விதியாகும்.

மேலும், பெண்ணானவள் சுதந்தரமில்லாமலிருக்கிறபடியால், பெற்றோர் தம் குழந்தைகளுக்குத் தக்க நாயகனைத் தேர்ந்தெடுக்க இன்றியமையாது கடமைப்பட்டவராயிருக்கின்றனர். முதலில் வரன் தேடிய்

போது, பெற்றோர் தம் வழிப்படு தெய்வத்தை வணங்கி, குலம், கோத்திரம், குடிமைநலன், கல்வி, முதலியவைகளை நன்கு கவனிப்பதுடன், செல்வத்தையும் ஒருவாறு கவனித்து விவாகத்தைத் தீர்மானிக்கவேண்டும். அங்ஙனந் தீர்மானித்தபின்பு, தம் அருமைப் புத்திரியைச் சகலவித ஆடையாபரணாதிகளால் அலங்கரித்து, ஓர்சுபதினத்தில் கன்னிகாதானம் செய்து கொடுக்கவேண்டும்.

விவாகமானபின் சதிபதி இருவரும் 'இல்லறதர்மம்' நடத்துவதற்கு உரியவராகின்றனர். இவ்வில்லறதர்மமானது புருடன் பெண்சாதியாகிய இருவர்களால் மனவொற்றுமைப்பாடுற்று, நடத்தப்படவேண்டியதாயிருக்கிறது. அவ்விருவர்களில் ஒருவர் மாத்திரம் நடத்துவது அசாத்தியம். அதுபற்றி,

'மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டுய்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று'

என்று அறநெறிச்சாரத்தில் கூறியிருத்தல் காண்க. ஆகையால் பறவையும் நிழலும்போல, புருடன் ஸ்திரீ இருவரும், நீங்கா ஒற்றுமையுடன் இல்லறதர்மத்தை நடத்தல் அவரது கடமையாகும்.

இல்லறதர்மத்திற்கு இன்றியமையாத் துணையாயிருப்பவள் இல்வாளென முதலிற் கூறியிருக்கின்றோம். ஆகையால், இல்லறதர்மம் இன்னதென்பதையும், அதை நடத்தவேண்டியவிதம் இன்னதென்பதையும், நாம் தெரிந்துகொள்ளு முன்பு, அத்தர்மத்திற்குரிய இல்லாளின் இலக்கணங்களை அறிந்துகொள்வது அவசியமன்றோ? இல்லாளின் இலக்கணமாவது அவள் கொண்ட கற்பினிலக்கணமேயாம். கற்பினிலக்கணம் கரைகடந்ததெனினும், ஒருவாறு எழுதத்துணிகின்றேன்.

(இன்னும்வரும்)

N. சேதுராமய்யர்.

"இரும்பானது ஞானியின் பரிசன வேதியால் தொடப்பட்டுத் தங்கமாகச் செய்யப்பட்டால் அதைப்பூமியில் வேணுமானாலும் வைக்கலாம்; அல்லது குப்பைக் குவியலில் வேணுமானாலும் எறிந்து விடலாம்! எப்பொழுதும் அது தங்கமாகவே யிருக்குமேயொழிய அதனுடைய பழைய ஸ்திதிக்கு வரவேமாட்டாது. இதேமாதிரியாகத் தான் அந்த சர்வவல்லமையுள்ள கடவுளின் பாதத்தை ஒருகாலத்திலாவது இருதயத்தில் பதித்தவனுடைய நிலைமையுமிருக்கிறது. அவன் இந்தப் பிரபஞ்சச் சந்தடிக்குள் வசித்தாலும், ஒன்றும் அவனை அச்சப்படுத்தமாட்டாது. (பரிசனவேதி-இழிந்தலோகங்களைப் பொன்னுக்கு மருந்து.)"

அறிவு.

(86-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அற்றாயின் அச்செயல்கடாம் யாவையோவெனின், அவையும் அளப்பில. என்னை? உயிர்களும் பலவாய், அவ்வுயிர்கடாம் அறிதரும் நெறிகளும் பலவாய், அந்நெறிகளான் நிகழுஞ் செயல்களும் பலவாய் விரிதலின்.

அச்செயல்களுள்ளும், இவை உண்மையான் ஈங்கு அறிவுண்டென்று கருதியறிதற்கேற்பனவாய், விளங்கின்று, அத்துணைச் சிறப்புவாய்ந்துள்ளன பல. பலவாயினும் அவையெல்லாம் மக்களுயிர்போல ஏனையுயிரின் வெள்ளிடைமலைபோற் றெள்ளிதின் விளங்கி நிகழ்வனவல்ல.

ஏனை உயிரின் அங்ஙனம் விளங்கி நிகழ்தல் இல்லையாயின், ஆங்கறிவுண்டென்று நவின்று கருதுதல் எற்றுக்கெனின், அற்றன்று, அவையும் முறையானும், நெறியானுங் கூர்ந்து நோக்குவார்க்கு அங்ஙனமே விளங்கி நிகழ்வனவாம். அது செய்யாக்காலே அவை அரியவாய்க்காட்டுமென்றவாறு.

ஆயிற, சிலவற்றின் விளங்கியும், ஏனையவற்றின் அங்ஙனமாகாது நிகழுதல் என்னையெனின்," அவை தாம் அவ்வவ்வுடம்பின் அமைதிக்கும், அவ்வவ்வுயிரின் பயிற்சிக்குந் தக்கவாறு நிகழும் போலும்.

அஃதாயிற், செயல் நிகழ்ந்தவிடமெல்லாம் அறிவு நிகழ்ச்சியும் உண்டென்று கோடல்சொல்லோ வெனிற் கொள்ளாம். என்னை? வளி வழங்குதல், மின் மின்னல், இடியிடித்தல், மழைபெய்தல், அருவிபாய்தல், ஆறொழுகுதல், கடல்கலைத்தல் என்றிவையெல்லாம் செயலேயாயினும் இவற்றை அறிவான் நிகழ்ந்தனவென்று கொள்ளாமையின் என்க.

இவற்றையும் அறிவான் நிகழ்ந்தனவென்று கொள்வாரும் உளராலோவெனின், அற்றன்று, அவர் இவ்வுயிரில்பொருட்கேயன்றி, உயிருள்பொருட்கும் அவ்வாறே கொள்வர்; ஆகலான் அவர் கருத்து வேறென்க. அது முன்னரே குறிப்பிக்கப்பட்டது.

ஆயின் இது அறிவான் நிகழ்வது, இது அன்னதன்று எனச் செயல்களைப்பிரித்து அறியுமாறு என்னையெனின், யாதானும் ஓர் செயலிற் கருத்தே, விருப்பே, ஆற்றலே, கருவியே, முயற்சியே, முடிவே என்றிவை காணப்படின் அது அறிவானே நிகழ்ந்ததெனக் கொள்ளப்படும்.

(இன்னும் வரும்)

தி. பா. சிவராமபிள்ளை.

முழுமுதற் கடவுள்
கடைமுதற் றொடர்நிலை.

2. இல்லாதென் பார்சிலர் உள்ளதென் பார்பலர் இவ்விரண்டும்
அல்லாதென் பார்சிலர் அவ்வவர்க் குள்ள வறிவளவிற்
சொல்வதெல் லாஞ்சொலத் தோன்றாத் துணையாய்த் துகளறுக்க
வல்லதி யாதம் முழுமுதற் காணிய வாழ்த்துதுமே.

3. மேதக்க கல்வியுங் கேள்வியுங் கேட்ப விரித்துரைக்கும்
நாதக்க நல்லறி வெல்லாம் படைத்துமென் ஞனென்பதான்
மோதிக் குடைந்தெம் முழுமுதற் காண்டொறு முட்டி முட்டி
நோதக்க வல்லது காண்டகவாகி நுணங்கரிதே.

4 நுண்ணிய நூலின் றுறைதொறும் போய்ப்போய் நுழையுந்தோறும்
எண்ணிய தண்பொரு ளெல்லாந் தெரிபவ ரேனுமிக்க
அண்ணிய தாய்நம் முழுமுத லாய்ந்தநின் றவ்வறிவி
னுண்ணிறை கின்றமை ஓர்கரி தீதிறும் பூதுடைத்தே.

(இன்னும் வரும்) தி. பா. சி.

உரை.

2. (பதவுரை) அவ்வவர்க்குள்ள அறிவளவில்-அவரவருடைய புத்திக்கு எட்டியபடி; சிலர்-சிலமனிதர்; இல்லதென்பார்-கடவுள் இல்லையென்று நாஸ்திகவாதம் பேசுவார்; பலர்-பலமனிதர்; உள்ளதென்பார்-தெய்வம் ஒன்றுண்டென்று சொல்வார்; சிலர்-வேறுசிலர்; இவ்விரண்டுமல்லதென்பார்-தெய்வம் உள்ளது மன்று, இல்லது மன்று என்று கூறுவர்; சொல்வதெலாஞ் சொல-இவ்வாறு மனிதர் அவரவருக்குத் தோன்றியவண்ணம் கூறுகிற்க; தோன்றாத்துணையாய எவ்விதத்தாலும் அவருடைய கரணங்களுக்குப் புலப்படாததாய், ஆயினும் எல்லாருக்கும் உயிர்க்குயிராய் நின்று; துகள் அறுக்க வல்லது யாது-அவரவருடைய துன்பத்தை நீக்கத்தக்கது எது; அம்முழுமுதல் காணிய-அப்பரிபூரணப் பரம்பொருளை உள்ளவாறு உணரவேண்டி; வாழ்த்துதும்-துதிக்கலாயினேம்.

3. (பதவுரை) மேதக்ககல்வியும் கேள்வியும்-உயர்ந்த படிப்பும் நுட்ப ஆராய்ச்சியும்; கேட்ப விரித்துரைக்கும்-கேட்போர்க்கினிது விளங்குமாறு விரித்துச் சொல்கின்ற; நாதக்கநல்லறிவெல்லாம்-நாவலிமையாகிய சொல்வன்மை சேர்ந்த நுண்ணறிவு முதலியயாவும்; படைத்தும்-

பெற்றிருந்தும்; நான் என்பதால்-"நான்" "நான்" என்னும் அகங்காரமிருக்குமானால்; என்-என்னபயனைத் தரும் (யாதொருபயனையும் தராதென்றபடி); எம்முழுமுதல காண்டொறும்-எமபெருமானாகிய பரிபூரணப் பொருளை உணர வேண்டும் போதெல்லாம்; மோதிக்குடைந்து-வாய்மையென்னும் புனலிற் புகுந்து ஸ்நானம் செய்துகொண்டு; முட்டி முட்டி-அகங்கார மென்னும் பிசாசைத் தட்டி யிழுத்தி; நோதக்க வல்லது-வருந்தியிருத்தலே முறையாகுமே யன்றி; (அவனைக்கட் புலனால் காணவிரும்பி எவ்வித முயற்சி செய்யினும்) காண்டக்கவாகி-ஞானக்கண்ணால் காணும்படியான தன்மையில்; நுணங்கரிது-(அவர்) கண்டபொருளாதல் இல்லை.

4. (பதவுரை) நுண்ணியநூலின துறைதொறும்-நுட்பமாகிய பொருளமைந்த சாஸ்திரங்களிலெல்லாம்; போய்ப் போய் நுழையுந்தோறும்-புகுந்து புகுந்து ஆராயுங்கால்; எண்ணிய நுண் பொருளெல்லாம்-அச் சாஸ்திரங்களில் நுதலிய (கருதிய) ஆழ்ந்த பொருள்களை யெல்லாம்; தெரிபவரேனும்-எளிதில் அறிந்து கொள்ளும் திறமுடையவரா யிருந்தாலும்; மிக்க அண்ணியதாய-மிகவும் நெருங்கி வேறன்றென ஒன்றி நிற்பதாகிய; நம்முழுமுதல-நம்பரிபூரணப் பொருளானது; அவ்வறிவினுள்-தமது அறிவினிடத்து; ஆய்ந்து நின்று நிறைகின்றமை-சூக்ஷமமாய் நிறைந்து நிற்கும் தன்மையை; ஓர்வரிது-(அவர்) உணர்தல் அரிதாகின்றது; இது இறும்பூது உடைத்தே-இஃதோர் பேராச்சரிய மல்லவா.

மு. பொ. ஈசுரமூர்த்தியாபிள்ளை.

"புகைவிளக்குகளின் வெளிச்சம் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாய்ப் பிரகாசிக்கிறது. ஆனால் அந்த வெளிச்சத்துக்காதாரமாகிய புகையானது ஒரே பொதுவான களஞ்சியத்திலிருந்து வருகிறது. அதேமாதிரியாக எத்தேசத்தும் எக்காலத்துமுள்ள சமயகுரவர்கள் சர்வவல்லமையுள்ள ஏக பரமபொருளினின்றும் இடைவிடாது வரானின்ற ஞானதீபத்தைத்தாங்கி நிற்கின்றபற்பல தீபஸ்தம்பங்களாயிருக்கிறார்கள்"

"சமுத்திரத்திலிருக்கப்பட்ட காந்தமலை அதன் பேரிற் செல்லுகிற கப்பலைத் தன்னிடம் இழுத்து அதின் இரும்பாணிகளை யெல்லாம் வெளியேயெடுத்து, ஒவ்வொருபலகையையும் வெவவேறாய்ப்பிரித்துக் கப்பலை சமுத்திரத்தில அமிழ்த்தி விடுகிறது. அம்மாதிரியாகவே சர்வவியாபகமாயிருக்கிற பேரறிவின் காந்த சாரத்தால் ஜீவாத்மாயிழுக்கப்பட்டபொழுது, அது மனுஷனுடைய மனதையும் சுயாபிமானமுமான தன்மையையும் ஒரு நிமிஷத்தில் போக்கி ஆத்மாவைக் கடவுளுடைய அளவுகடந்த அன்பில் அமிழ்த்துகிறது".

மாணவர் போதம்.

திருவள்ளுவர் முதற்குறள்.

கிருஷ்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் சம்பாஷணை.

கி. அர்ச்சுனா! நமது நண்பன் விவேகசுந்தரத்துக்குச் சிறிதுகாலமாய் வந்துகொண்டிருக்கிற 'விவேகபாநு' என்னும் மாதாந்தத் தமிழ்பபத்திரிகையைப்பார்த்தனையா?

அ. ஆம் பார்த்தேன். யானும் அப்பத்திரிகைக்கெழுதி, எனக்கும் இம்மாதசஞ்சிகை வந்திருக்கிறது. ஆனால் அதிலுள்ள விஷயங்களில் ஒன்றேனும் நான் வாசித்துப்பார்க்கவில்லை.

கி. ஏன்? அதை வாசிக்க உனக்குச் சாவகாசமில்லையா?

அ. அப்படியல்ல. 'விவேகபாநு' என்பதற்கு ஞானசூரியன் என்ற அர்த்தம் விளங்கிற்று. ஆனால் சஞ்சிகையின் தலைப்பில்,

"அகரமுதல வெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றேயுலகு."

என்ற திருக்குறள் வரையப்பட்டிருக்கின்றது. அதன் அர்த்தத்தை நன்குணர்ந்து கொண்டபின் சஞ்சிகையின் விஷயத்திற் பிரவேசிக்கலாமெனக் கருதினேன்.

கி. என்ன! நீ சொல்வது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே! இம்முதற்குறளின் அர்த்தம் இதுவரை நீ உணர்ந்ததில்லையோ! திருக்குறள் உன்னிடத்தில் இருக்கின்றதே. அதனை வாசித்ததில்லையா?

அ. அல்ல. முழுவதும் வாசித்திருக்கிறேன்; பரிமேலழகியாரது உரையும் ஒருவாறு பார்த்திருக்கின்றேன். ஆயினும் இக்குறளின் அர்த்தம் நன்றாய் விளங்கவில்லை. நீ குறளை நன்றாய் வாசித்திருக்கிறாயென்று நானறிவேனாதலால் உன்னிடத்திற்கேட்டுக்கொள்ளலாமென்றிருந்தேன். அதற்கிப்போது சந்தர்ப்பம் வாய்த்தமையால், தயைசெய்து சொல்வாயாக.

கி. நல்லது, இக்குறளின் அர்த்தமென்னவெனில், எழுத்துக்களெல்லாம் 'அ' என்னும் அக்ஷரத்தை முதலாகவுடையனபோல், இவ்வுலகம் கடவுளை முதலாகவுடையது. யாதொரு விகாரத்தையுமடையாமல் வாயைத்திறந்தவுடனுண்டாகும் சப்தத்தினியல்பே 'அ' என்பதாயிருத்தலானும் அதன் விகாரத்தினாலேயே மற்ற எழுத்துகளெல்லாம் பிறத்தலானும் அகரம் எழுத்துகளுக்கெல்லாம் முதற்காரணமாயிற்று. அதுபோல யாதொருவிகாரமுமில்லாமல் தம்மியல்பிலிருப்பவராகலானும்

அவரினின்றே யுலகம் தோன்றுதலினாலும் கடவுளே உலகத்திற்கு முதற்காரணனென்றுணர்க.

அ. நீ சொல்லியதை ஒருவாறுணர்ந்தேன். பரிமேலழகர் கருத்தும் அதுவே. ஆயினும் இவ்வாக்கத்தில் எனக்கோர் சந்தேகம் தோன்றுகின்றது.

இ. என்ன சந்தேகம்? அதனைச்சொல்வாயாகில் எனக்கு தெரிந்தவரையில் அதை நிவிர்த்திக்க முயற்சிக்கிறேன்.

அ. ‘எழுத்தெல்லாம்’ என்பதில் மெய்யெழுத்துகளும் அடங்கியிருப்பதாகக் குறிப்பித்தனை. அது எங்ஙனம் பொருந்தும்? உயிர்கள் ஏறி நடத்தும் ஜாதியாகவும் மெய்கள் தாங்கிச்சுமக்கும் ஜாதியாகவும் இருத்தலின் இரண்டும் வெவ்வேறு ஜாதிகளாகின்றன. ஆகவே (எனவே) உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும் அகரத்தினின்று பிறக்குமென்பது பொருந்தாது. ஆதலால் மெய்யெழுத்துகள் ‘எழுத்தெல்லாம்’ என்பதிற் சேராவென்று நினைக்கிறேன்.

இ. நன்கு சொல்லினை! ஏறி நடத்துவதாலும் தாங்கிச்சுமப்பதாலும் வெவ்வேறு ஜாதிகளாதல் எங்ஙனம்? அவை ஒன்றிலிருந்து உற்பத்தியாதல் கூடாதென்பதற்கு நியாயமென்னை?

அ. மேல்நின்றியக்குவன தாங்கி நின்று இயக்கப்படுவனவற்றிற்கு வேறென்பதற்கையமென்னை? பாகனும் குதிரையும் ஒரு ஜாதியென்பாருமுளரோ! இல்லையாதலின் அவை ஒன்றிலிருந்து உற்பத்தியாகின்றதெனச் சொல்லுதல் தவறன்றோ?

இ. அர்ச்சுனா! என்ன! நீ சொல்வது விநோதமாயிருக்கின்றதே! ஒருமலையிலிருந்து கொண்டுவந்த கற்களினாற் கட்டப்பட்ட மண்டபத்தில் ஒன்று தாங்குகிறதாயும், ஒன்று தாங்கப்பட்டதாயுமிருக்கவில்லையா? அம்மலையிலிருந்தே கொண்டுவந்த கற்களில் ஒன்று நாம் வணங்கும் தேவதாபிம்பமாகவும் ஒன்று நமது காலின்கீழ் மிதிகல்லாகவுமிருக்கவில்லையா? ஒரு செடியிலிருந்துண்டான மூங்கில்களில் ஒன்று பல்லக்கின் கொம்பாகி அரசன் தலைமேலும் மற்றொன்று கழையாகிக் கூத்தன்காலின் கீழுமிருக்கவில்லையா? இவ்வாறு ஒன்றிலிருந்துண்டாகி மேல், கீழ் என்னும் பேதத்தைப் பெற்றிருப்பவை எத்தனையோ உளவே. அவை வேறு வேறு ஜாதிகளாகுமா? ஆகாதாகையால், உயிரும் மெய்யும் வெவ்வேறு ஜாதிகளெனவும் அவை ஒன்றிலிருந்துண்டாகாவெனவும் சொல்வது சரியன்று. மெய்யெழுத்துகளையும் உட்படுத்தவேண்டியே ‘எழுத்தெல்லாம்’ என்று நாயனாரும் கூறியிருப்பதறிக.

அ. நீ சொன்ன நியாயங்களையெல்லாம் நன்குணர்ந்தேன். ஆனால் மெய்கள் அகரவுயிரினின்றும் வந்தனவாகக்கொள்ளுமிடத்து, பொன்னி

ளின்றும் வந்த பூஷணங்கள் மாற்றுவைகளில் தாழாது நிற்றல்போல எழுத்துக்களின்மேலேறி யியங்கப்பண்ணும் அகரத்தின் தன்மையும்மெய் யெழுத்துகளிற் காணப்படல் வேண்டாமோ?

சி. பொன்னின் தன்மை பூஷணத்திலிருப்பதுபோல அகரத்தின் தன்மை மெய்யின் கண் இருந்தால் தான் ஒப்புக்கொள்வாய்போலும்.

அ. ஆம். அப்படித்தானே யிருக்கவேண்டும்.

சி. நல்லதிருக்கட்டும். நீ இன்று காலையில் சித்திரசபையின் முன் பார்த்த யானைவாகனம் என்ன மரத்தாற் செய்யப்பட்டது?

அ. நான் அதை யின்னமரமென்று பார்க்கவில்லையே.

சி. அவ்வாகனத்திற்கு முதற்காரணம் யாதென நினைக்கிறாய்?

அ. மரம் தான்.

சி. நல்லது. மரத்தின் தன்மை அதன் காரியமாகிய யானையில் வெளிப்பட்டதா?

அ. இல்லை.

சி. நல்லது. வைரத்தைப் பார்த்திருக்கின்றனையே. அதன் முதற் காரணமென்ன?

அ. வைரத்தின் முதற் காரணம் சுத்தக்கரி (Carbon) தானென்று படித்திருக்கிறேன்.

சி. காரணமாகிய கரியின் தன்மை காரியமாகிய வைரத்தில் காணப்படுகின்றதா?

அ. இல்லை இல்லை. அதனாலென்ன?

சி. காரணத்தின் தன்மை காரியத்தில் தோற்றப்படவேண்டுவதா வசியமின்றெனப் பெறப்படுதலின், நீ சொல்லியவாறு மெய்யெழுத்துக்களை அகரத்தின் காரியமாகக்கொளற்கு அதன் தன்மை அவைகளிடத்திற் காணப்பட வேண்டுவதில்லை யென்றேற்படுகிற தன்றோ?

அ. ஆம் ஆம். வேண்டியதில்லைத் தான்.

சி. ஆயினும், அகரத்தின் தன்மை மெய்யெழுத்தில் இல்லாமலும் போகவில்லை.

அ. மெய்யெழுத்தில் இருக்கின்றதோ! எங்கிருக்கின்றது?

(இன்னும் வரும்)

V. A. நமசிவாயம்பிள்ளை B. A.

"அக்கினியானது தன் சமீபத்தில் வரும்பொருள்களைத் தகிப்பது மன்றி, தனக்கிடங் கொடுக்கும் பொருள்களையுந் தகிக்கின்றது. அது போலவே கோபமும தனக்குச் சமீபத்தில் வருபவர்களை மாத்திரம் எரிப்பதோடு நில்லாமல் தனக்கிடங் கொடுத்தவனையும் எரிக்கின்ற காதலின் நன்றிகுன்றிய இப்பாவிக்கு யாரும் இடங்கொடுத்தல் தகாது."